மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, திரு. பி.ஆர். சுந்தரம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

99—

சுற்றுலாத் தலம்

***2117—திரு. பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீ குருபகவான் திருத்தலமாகிய ஆலங்குடியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஸ்ரீ குருபகவான் திருத்தலமாகிய ஆலங்குடியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க எந்தவிதமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீ குருபகவான் திருத்தலத்தை, சுற்றுலாத் தலமாக ஆக்குவதற்கு செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். இந்த குரு பகவான் கோயிலைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், சோழ மண்டலத்தின் மையப் பகுதியாக நவக்கிரக வரிசையில் நடுநாயகமாக விளங்குவது ஆலங்குடி குரு பகவான் திருக்கோயில். அந்தக் கோயிலைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற குருவைப் பார்த்தால் கோடி புண்ணியம் என்பார்கள். அந்தவகையிலே குருவை நாம் பார்த்தாலும், குரு நம்மைப் பார்த்தாலும் கோடி புண்ணியம் கிடைக்கும். அந்த....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு ஏதும் குருப் பெயர்ச்சி ஆகிறதா? (சிரிப்பு)

திரு. பி.ஆர். சுந்தரம்: அந்த ஆலங்குடி கோயிலுக்கு வடக்கே கும்பகோணம், தெற்கே மன்னார்குடி, கிழக்கே திருவாரூர், மேற்கே தஞ்சாவூர் என நான்கு பக்கமும் சூழ்ந்திருக்கின்றன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அந்தத் திருக்கோயிலுக்கு பக்தர்கள் வாரா

2004 ஜூலை 30]

வாரம் வருகை தருகிறார்கள். ஆகவே, அங்கே தங்குவதற்கு இடவசதி இல்லாத காரணத்தினால், சுற்றுலாத் துறை மூலமாக கோயிலில் தங்கும் விடுதி மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்குச் சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுக்குமா என்பதோடு, வருகிற 19–8–2004 அன்று குருப் பெயர்ச்சி நடைபெற இருக்கிறது. அங்கே இலட்சக்கணக்கான பக்தர்கள் வர இருக்கிறார்கள். இங்கே அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும் இருக்கின்ற காரணத்தால், போக்குவரத்துத் துன்ற அமைச்சரும் இங்கே இருக்கின்ற காரணத்தினால், அறநிலையத் துறையின்மூலமாகத் தங்கும் விடுதி மற்றும் சாப்பாடு வசதிகளை மேற்கொள்ளவும், போக்குவரத்துத் துறை அமைச்சர்மூலமாகச் சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை எந்த ஓர் இடத்தையும் சுற்றுத் தலமாக அறிவிப்பதில்லை. ஆனால் சுற்றுலாத் தலங்களுக்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கணக்கில் கொண்டு கழிப்பிட வசதி, சாலை வசதி, உணவகம், குடிநீர் வசதி, பொருட்கள் பாதுகாப்பு அறை, மின் விளக்குகள், தங்கும் விடுதி, போக்குவரத்து வசதி, சிறுவர் பூங்கா போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. திருவாரூர் மாவட்டம், ஆலங்குடியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயிலில் இடம்பெற்றுள்ள அருள்மிகு குருபகவான் மிகவும் புகழ்வாய்ந்தவராகக் கருதப்படுகிறார். இக்கோயில் கும்பகோணத்திலிருந்து 16 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தற்போது அங்கு கழிப்பறைகள் மற்றும் குளியல் அறைகள் உள்ளன. திருக்கோயில் வளாகத்தில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இக்கோயிலுக்குள் போதுமான மின் இணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வழிபடுவோர் தங்கும் விடுதி கோயில் வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது.

நவக்கிரக சன்னதி சுற்றுச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 2003–2004 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க 50 இலட்சம் ரூபாயை வழங்கி, சுற்றுச் சாலைகள் திருநள்ளாறு நீங்கலாக இதர சுற்றுலாத் தலங்களான சூரியனார் கோயில், திங்களூர்,

வைத்தீஸ்வரன் கோயில், திருவெண்காடு, ஆலங்குடி, கஞ்சனூர், கீழ்பெரும்பள்ளம் மற்றும் திருநாகேஸ்வரம் ஆகிய இடங்களில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளான கழிப்பறை, வாகனம் நிறுத்துமிடம், அணுகு சாலை, ஓய்வுக் கூடம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் முகமையான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஆலங்குடி மேம்பாட்டிற்காக ரூபாய் 6.70 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வாகனம் நிறுத்தும் இடம் கட்டப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், நவக்கிரக ஆலயங்களுக்குச் சென்று வழிபடும்வகையில், நவக்கிரகச் சுற்றுலாவை நடத்தி வருகிறது. இந்தச் சுற்றுலா ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு நவக்கிரக ஆலயங்களை வழிபட்ட பிறகு, திங்கட்கிழமை காலை சென்னை வந்தடையும். நவக்கிரக ஆலயங்களின் சிறப்புகளை எடுத்துக் கூறும்வகையில், சிறப்பு மடிப்பேடு, சுற்றுலாத் துறையால் வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம், அவ்வளவுதானா? திருப்தியாகிவிட்டீர்களா?

வினா எண் 100, திரு. கே.ஆர். இராமசாமி, மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

100—

சுற்றுலாத் தலம்

***44734–திரு. கே.ஆர். இராமசாமி:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேவகோட்டை நகராட்சியில் இளைஞர்களுக்காகப் பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?